Privileges for the financial year 1956–57 in the vacancy caused by the cessation of membership of Sri P. P. Ummer Koya consequent on the reorganization of States."

The motion was put and carried.

MR. CHAIRMAN : I have to inform the House that, in accordance with Regulation 2 (1) framed for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix the following programme for election of one Member to the Committee of Privileges for the financial year 1956–57 :—

Last date for making nominations.	5 p.m. on Thursday, the 20th December 1956.
Date for the scrutiny of nominations.	12 noon on Friday, the 21st December 1956.
Last date for the withdrawal of candidature.	3 p.m. on Saturday, the 22nd December 1956.
Election, if necessary ..	Between 11 and 1 p.m. on Monday, the 24th December 1956.

Nomination forms can be had from the Secretary to the Council.

VI.—PRESENTATION OF THE BUDGET FOR THE YEAR 1957–58.

*THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவைத் தலைவர் அவர்களே, 1957–58-ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தின் மதிப்பீடுகளை இச்சபை முன் சமர்ப்பிக்கின்றேன். இந்த மதிப்பீடுகள் இடைக்கால உத்தேச மதிப்பீடுகளே. ஆண்டு முழுவதற்கும் புள்ளி விவரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளபோதிலும் நிதி ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கு செலவாகக்கூடிய தொகைக்கு மட்டுமே ஒரு உத்தேச மான்யம் கோரப்படுகிறது. நிதி ஆண்டின் ஆரம்பத்திலிருந்தே நடத்தக்கூடிய புதிய வேலைத் திட்டங்கள் மட்டுமே இந்த வரவுசெலவுத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. மற்ற புதுத் திட்டங்களையும் வருவாயில் துண்டுவிழும் தொகையை ஈடுகட்ட வழி வகைகளையும் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் அமைக்கப்படும் புது அரசாங்கமே ஆலோசிக்கவேண்டும். அவ்வாறு ஆலோசனை செய்து திருத்தி அமைக்கப்பட வரவு செலவுத் திட்டம் 1957-ம் ஆண்டு ஜூன் மாத வாக்கில் சபை முன் கொண்டுவரப்படும். இந்த வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய அம்சங்களை அசெம்பிளியில் நிதி மந்திரி செய்த உரை [a] விளக்கியுள்ளது, விரிவான வரவு செலவு அறிக்கைகள் இம்முறை தயாரிக்கப்படவில்லை. ஆனால், இத்துடன் வழங்கப்பட்டுள்ள தனி அறிக்கைகளிலும் [b] அதன் இணைப்புகளிலும் கனம் அங்கத்தினர்களுக்குத் தேவையான குறிப்புகள் அனைத்தும் அனேகமாகக் கிடைக்கும்.

2. இந்த வரவு செலவுத் திட்டப்படி வருவாய் நிதி இனத்திலிருந்து 57 கோடியே 71 லட்ச ரூபாயும் மூலதன இனத்திலிருந்தும் மற்ற இனங்களிலிருந்தும் 29½ கோடி ரூபாயும் செலவு செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. ஆக மொத்தம் செலவு 87 கோடியே 21 லட்ச ரூபாயாகும். இந்தச் செலவில் 46 சதவிகிதம், அதாவது சுமார் 40 கோடி ரூபாய் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துள்ள புது அபிவிருத்தித் திட்டங்களுக்காக செலவு செய்யப்படும் என்பதை கனம் அங்கத்தினர்கள்

---

[a] Printed as Appendix I on pages 12–16 infra.

[b] Printed as Appendix II on pages 17–73 infra.

வரவேற்பார்கள். இந்த 40 கோடி ரூபாயில் 16 கோடி ரூபாய் மின்சார அபிவிருத்தித் திட்டங்களுக்கும், 10 கோடி ரூபாய் விவசாயத் திட்டங்களுக்கும், அத்துடன் இணைந்த நீர்ப்பாசன தேசீய வளர்ச்சித் திட்டங்களுக்கும், $3\frac{1}{2}$ கோடி ரூபாய் கிராமக் கைத்தொழில்களுக்கும் சிறு கைத்தொழில்களுக்கும் ஆகும். மேலும் $3\frac{1}{2}$ கோடி ரூபாய் கல்விக்காகவும் 2 கோடி ரூபாய் பொது சுகாதாரத்திற்கும் எஞ்சிய தொகை மற்ற முன்னேற்றத் திட்டங்களுக்குமாக செலவு செய்யப்படும். இப்போது நடந்துவரும் அபிவிருத்தித் திட்டங்களை இதே முறையில் நடத்தி வருவதற்காக வரவு செலவுத் திட்டத்தில் பெரும் தொகைகள் ஒதுக்கப் பட்டுள்ளன. மேலே குறிப்பிட்ட 40 கோடி ரூபாய் இந்தத் தொகைகளுக்கும் மேலாக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை கனம் அங்கத்தினர்கள் காணவேண்டும். வரவு செலவுத் திட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இல்லாத மற்ற செலவின் விகிதத்தை, அதாவது சட்டம், ஒழுங்கு, பாதுகாத்தல், வரி வசூலித்தல், முதலியவற்றால் ஏற்படும் செலவுகள் போன்றவற்றின் விகிதத்தை படிப்படியாகக் குறைத்து வருவதே சென்ற சில ஆண்டுகளாக அரசாங்கத்தின் நோக்கமாக இருந்துள்ளது. இத்தகைய செலவு 1939–40-ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 42 சதவிகிதமாக இருந்தது. 19 0–51-ம் ஆண்டின் இச்செலவு 33 சதவிகிதமாகக் குறைந்தது. தற்போது வரவு செலவுத் திட்டத்தில் இது மேலும் குறைக்கப்பட்டு 24 சதவிகிதமாகத்தான் உள்ளது.

3. இப்பொழுது வகுக்கப்பட்டுள்ளபடி வரவு செலவுத் திட்டத்தின் வருவாய் இனத்தில் ஐந்து கோடியே ஆறு லட்ச ரூபாய் துண்டுவிழும். புது அரசாங்கத்தின் மூலம் புதுத் திட்டங்கள் சேர்க்கப்படும்பொழுது, துண்டு விழும் இத்தொகை மேலும் பெரிதாகக்கூடும். இந்தத் தொகை மிகப் பெரிதாக உள்ளது என்பது உண்மையே. ஆயினும் ராஜ்யத்தின் அபிவிருத்திக்காக மிக விரிவான, தீவிரமான திட்டத்தை வகுத்து நடத்த நாம் உறுதி கொண்டுள்ளதே இவ்வளவு பெரும் துண்டு விழுவதற்கு முக்கிய காரணம் ஆகும். துண்டு விழும் தொகைகள் கட்டுக் கடங்காமல் போய்விட்டன என்ற கவலைக்கு இடம் இல்லை. ராஜ்யத்தில் வரி விதிப்பு வசதிகள் குறைவாகவே உள்ளபோதிலும் இவ்வசதிகளை நாம் இதுவரை நன்கு பயன்படுத்தியே வந்துள்ளோம். விவசாய வருமான வரி, நில வரி மீது உபரி வரி, மின்சார கட்டணங்கள் மீது உபரி வரி, துணி, புகையிலை, சர்க்கரை போன்ற பொருள்களுக்கு அதிக விற்பனை வரி, போக்குவரத்து வசதிகள் மீது புதிய கட்டணம் போன்ற புதிய வரி விதிப்பு யோசனைகளை நாம் சென்ற சில ஆண்டுகளாக நடைமுறையில் கொண்டுவந்துள்ளோம். இவற்றால் மேலும் ஆண்டிற்கு சுமார் $5\frac{1}{2}$ கோடி ரூபாய் நமக்கு வருவாய் கிடைக்கும். இவ்வாறுதான் நாம் நிதி நிலைமையைச் சரிக்கட்டி வந்துள்ளோம். புது அரசாங்கம் இப்பிரச்னையை மேலும் ஆராய்ந்து இயன்றதைச் செய்யும். இப்பொழுது ஆலோசனை நடத்திவரும் நிதிக் கமிஷன் அதற்குள் நமக்கு உதவிக்கு வரும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

4. சமீப கால வரவு செலவுத் திட்டத்தில் தொடர்ந்து துண்டு விழுந்து கொண்டு இருப்பதன் காரணங்களில் முக்கியமானது, பொது மக்களிடமிருந்து வாங்கிய கடனைத் திருப்பித் தருவதற்காக நாம் ஒதுக்கிவைக்க வேண்டியுள்ள தொகைகள் அதிகரித்துக் கொண்டிருப்பதேயாகும். இக்கடன்களுக்கான வட்டி செலுத்துவதற்கு 1947–48-ம் ஆண்டில் 82 லட்ச ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த வரவு செலவுத் திட்டத்தில் 4 கோடியே 80 லட்ச ரூபாய் ஒதுக்கவேண்டியுள்ளது. ஆனால், இதனால் நாம் கவலைப்படவேண்டிய அவசியம் இல்லை. நாம் பொது மக்களிடமிருந்து கடனாக வாங்கியுள்ள தொகைகளையெல்லாம் லாபகரமான மூலதனத் திட்டங்களில் பயன்படுத்தியுள்ளோம். சென்ற ஐந்தாண்டுகளில் இந்திய அரசாங்கத்திடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் நாம் மொத்தம் 96 கோடி ரூபாய் கடன் வாங்கியுள்ளோம். இதற்கு எதிராக இந்த ஐந்து ஆண்டுகளில் நாம் சுமார் 100 கோடி ரூபாயை லாபகரமான மூலதனத் திட்டங்களில் பயன்படுத்தியுள்ளோம். இந்த 100 கோடி

[Sri M. Bhaktavatsalam] [17th December 1956

ரூபாயில் சுமார் **40** கோடி ரூபாய் மின்சாரத் திட்டங்களுக்கும், **25** கோடி ரூபாய் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கும், சுமார் **5** கோடி ரூபாய் கட்டடங் களுக்கும், **19** கோடி ரூபாய் ஸ்தலஸ்தாபனங்களுக்கும் விவசாயிகளுக்கும் கடன் வழங்குவதற்காகவும், **11** கோடி ரூபாய் மற்ற லாபகரமான மூலதனத் திட்டங்களுக்காகவும் பயன்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களில் சில இனிதான் பலன் தரும். ஆகவே தற்காலிகமாக நமக்கு சில கஷ்டங்கள் இருக்கலாம். ஆனால் இத்திட்டங்களில் செலவு செய்வது விவேகமில்லை என்று யாரும் கூறமுடியாது. நம் ராஜ்யத்தின் நிதி நிலைமை அடிப்படையில் உறுதியாக உள்ளது என்பதையும் யாரும் சந்தேகிக்க முடியாது. ஆண்டு தோறும் கடன் வாங்க முற்படும்பொழுது பொது மக்கள் மிகவும் உற்சாகமாக அதை வரவேற்று ஆதரித்துள்ளதற்கும் இதே முக்கிய காரணமாகும்.

இந்த உரையுடன் **1957–58**-ம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை அவை முன் சமர்ப்பிக்கின்றேன்.

MR. CHAIRMAN : The House will now adjourn and meet again at 3 p.m. to-morrow.

The House then adjourned.

VII.—PAPERS [a] LAID ON THE TABLE OF THE HOUSE.

[a]1. *Notification issued with G.O. Ms. No. 1721, Home, dated 14th June 1956, regarding amendment to Rule 3 (h) to the Madras Motor Vehicles Rules, 1940.*

[b] 2. *Notification issued with G.O. Ms. No. 2525, Home, dated 6th September 1956, regarding amendment to Rule 19 regarding scale of diet under the Madras Suppression of Immoral Traffic Act, 1930.*

[b] 3. *Notification issued with G.O. Ms. No. 2565, Home, dated 12th September 1956, regarding remission of Court-fees on certain applications and petitions presented to officers of the Port department.*

[b] 4. *Notification issued with G.O. Ms. No. 2390, Agriculture, dated 6th October 1956, regarding amendments to Rule 19 of the Madras Commercial Crops Markets Rules, 1948. [Laid on the table under section 18 (4) (c) of the Madras Commercial Crops Markets Act.]*

[b] 5. *Notification issued with G.O. Ms. No. 3580, Public (Services), dated 23rd October 1956, regarding the re-designation of certain posts in the Madras Educational Subordinate Service. [Laid on the table under Article 325 (5) of the Constitution of India.]*

[b] 6. *Notification issued with G.O. Ms. No. 3581, Public (Services), dated 23rd October 1956, regarding the exclusion from the Commission's purview of the posts of the District Publicity Officers. [Laid on the table under Article 320 (5) of the Constitution of India.]*